**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.495/2021**
**வழக்கு சாட்சி PW–12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.ரமேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுந்தர்ராஜ் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | நாகர்கோவில் | வயது | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 30$^{th}$, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நாகர்கோவில் திரவியம் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.09.2018ம் தேதி, மாலை 06.10 மணியளவில் நான் திரவியம் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, 23 வயது மதிக்கத்தக்க இசக்கிராமகிருஷ்ணன் என்பவர் காயச் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு அதே தினம், ஆலங்குளம் அருகே நடந்த தாக்குதல் சம்பவத்தில் காயம் ஏற்பட்டதாக அவரை அழைத்து வந்த அருணாச்சலம் என்பவர் கூறினார். அவர் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, பின்னர் மேல்சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதித்தபோது, கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

(1). இடது கை மணிக்கட்டு பகுதியில் கை முழுவதும் முழுவதுமாக துண்டிக்கப்பட்டு காணப்பட்டது.

(2). வலது கை பெருவிரல் பகுதியில் 2 x 0.5 x 0.5 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவருடைய இடது கை மணிக்கட்டிற்கு கீழ் முறிந்த பகுதியை தனியாக கொண்டு வந்தார்கள். அவருக்கு மணிக்கட்டு பகுதியில் இணைக்கும் சிகிச்சை செய்யப்பட்டது. அவர், 10.10.2018–ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அரிவாளால் தாக்கும்போது, நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.3** ஆகும். திரவியம் மருத்துவமனையில் உள்ள கேஸ் சீட் மற்றும் புகைப்படங்களை நான் எடுத்து வந்துள்ளேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு, மருத்துவமனையிலிருந்து மருத்துவ விடுவிப்பு சான்றிதழ் வாங்கி வந்தார்களா? என்றால் எனக்கு தெரியாது. நான் எலும்பு முறிவு மருத்துவர் இல்லை. நோயாளிக்கு சிகிச்சை வழங்கிய குழுவில் நானும் ஒரு மருத்துவராக இருந்தேன். அவருக்கு மருத்துவர் திரவியம் அறுவை சிகிச்சை செய்தார். அவரை ஆய்வாளர் விசாரித்தார். காயம்பட்டவர் எங்களது மருத்துவமனைக்கு வரும்போது அவருக்கு சுயநினைவு இருந்தது. நான் தான் அவரிடம் காயத்தை பற்றி கேட்டேன்.

அவருக்கு எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரைக்கும் அறுவை சிகிச்சை நடந்தது என்றால் அதனை பற்றியுள்ள குறிப்பு இல்லை. ஐ.சி.யு-வில் அவர் ஒரு நாள் இருந்தார். அவருக்கு அறுவை சிகிச்சை முடிந்து 2, 3 மணிநேரத்தில் சுயநினைவு வந்திருக்கும். அவருக்கு வலது கை பெருவிரல் காயத்திற்கு தையல் போடப்பட்டது. என்னிடம்

ஆயுதம் காண்பித்து ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்படும்போது, நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.01 16:52:21 +0530